[திரு. தங்கம் தென்னரசு] [2010 மே 6

to take away the rights of the minorities to use their mother tongue as a medium of instruction and it does not in any way curtail the rights guaranteed on the minority institutions under Articles 29(1) & 30(1) of the Constitution of India. The impugned legislation is neither unreasonable, discriminatory nor it results in minority institutions losing their character" என்று மிகத் தெளிவாக அந்தத் தீர்ப்பிலேகூட மாண்புமிகு நீதிபதிகள் அன்றைக்கு எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். தற்போது அமல்படுத்தப்பட்டிருக்கக்கூடிய சமச்சீர்க் கல்வி முறையில், நான்கு வாரியங்கள் பின்பற்றி வந்த பாடத் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரே பாடத் திட்டமாக (Syllabus) வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், நான்கு வாரியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அனைவரும் ஒரே பாடத் திட்ட.த்தினைப் பயன்படுத்துவார்கள்.

ஆனால் பள்ளிகள் தற்போது தாங்கள் பின்பற்றி வரும் பயிற்று மொழிகளில் (Medium of Instruction) எவ்வித மாற்றமும் இருக்காது. எனவே, தமிழ் மொழி தவிர பிற சிறுபான்மை மொழிவழிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தொடர்ந்து தங்கள் மொழிகளிலேயே பாடங்களைக் கற்க வழிவகை இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சிறுபான்மை மொழிப் பாட நூல்கள் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பள்ளிகளுக்குத் தொடர்ந்து இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. சிறுபான்மைப் பள்ளிகளில் பிற பாடங்கள் அம்மொழிவழியாகவே கற்பிக்கப்பட்டு வருகின்றன. எனவே, சமச்சீர்க் கல்வி முறையில் பிற மொழிவழி மாணவர்கள்மீது தமிழ் கட்டாயப்படுத்தப்படுகிறது என்பது தவறான செய்தியாகும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன். சிறுபான்மை மக்கள்மீது தலைவர் கலைஞர் அரசு எவ்வளவு அக்கறையாக இருக்கிறது என்பதை இந்த நாடும், இந்த அவையும் நன்றாக அறியும் என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமச்சீர்க் கல்வி சம்பந்தமாக

2010 மே 6] [கலைஞர் மு. கருணாநிதி]

கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு திரு. எடியூரப்பா அவர்கள் கூறிய கருத்துகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் மற்றும் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும்—தங்களுடைய கவலையை—அந்த அடிப்படையிலே எழுந்த கருத்துகளை இங்கே தெரிவித்திருக்கிறார்கள்.

பத்திரிகைக்காரர்களைச் சந்திக்கின்றபோது, ஆராய்ந்து அல்லது ஏற்கெனவே இருந்ததைத் தெளிவுபடுத்திக் கொண்டு பேசுவது பெரிய கலை. இதிலே மாண்புமிகு திரு. எடியூரப்பா அவர்கள் எப்படியோ ஏமாந்திருக்கிறார் என்றுதான் நான் கருதுகின்றேன். கர்நாடகத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் இடையிலே உள்ள கலாச்சார உறவு, நட்புறவு—இவற்றை ஊனப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் அல்லது தெரிந்தோ, தெரியாமலோ சில நிருபர்கள் கர்நாடக முதல்வரிடத்திலே ஒரு தவறான தகவலைச் சொல்லியிருக்கின்றார்கள். அதனால்தான், "அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று நம்பித் தடுமாற்றம் அடைய வேண்டாம்; எவர் சொன்ன சொல்லானாலும், அதை உந்தன் இயல்பான பகுத்தறிவால் எண்ணிப் பார்ப்பாய்" என்ற பெரியாரின் மொழிகள்தான்—சர்வக்ஞர் என்கின்ற கர்நாடகத்திலே இருந்த அந்த மகானுடைய கொள்கையாகவும் போற்றப்படுகிறது.

நிருபர்கள் இந்தக் கேள்வியைக் கேட்கின்றபோது—என்ன காரணத்தாலோ—தமிழ்நாட்டிலுள்ள அதிகாரிகளையோ அல்லது அமைச்சர்களையோ அல்லது தொலைபேசி மூலமாக என்னிடமோ கேட்டுத் தெரிந்து கொண்டு அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருப்பாரேயானால் நிச்சயமாக விளக்கம் பெற்றிருப்பார். ஆனால், அவசரத்தில் இந்த இரு மாநிலங்களுக்கிடையே பிரச்சினை வராதா; வந்தால் அதை வைத்துக் கொண்டு சில காலம் குளிர் காயலாமே என்று கருதுகின்ற சில பத்திரிகை நிருபர்களுடைய குறும்புத்தனத்தால், இந்த நிலை ஏற்பட்டதாக நான் கருதுகின்றேன். இதற்கான விளக்கத்தை நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லித் தெளிவுபடுத்தியிருக்கிறார். இதற்குப் பிறகும் மாண்புமிகு திரு. எடியூரப்பா அவர்கள் இதை உணராவிட்டால், நாம் வருத்தம்தான் படவேண்டும். ஆனால் நம்முடைய நிலை, தமிழ் மொழியைக் காப்பதிலும், பிற மொழி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்துவதிலும், தமிழ் மொழியைக் காக்கின்ற அந்த உணர்வில் பிற மொழிகளுக்கு எந்த ஊனமும் வராமல் பாதுகாப்பதும்தான்

என்ற தெளிவான கொள்கை உடையது திராவிட முன்னேற்றக் கழகம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த விளக்கத்தின் மூலமாக நான் கர்நாடக முதலமைச்சருக்கும், கர்நாடகத்திலே இருக்கின்ற மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். வணக்கம்.

முற்பகல் 11-25

(இ) மாண்புமிகு முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு அளித்துள்ள கூடுதல் உணவு தானிய ஒதுக்கீடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், சொல்லுங்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலிருந்து தமிழகத்திற்கு சிறப்பு ஒதுக்கீடாக அரிசி ஒதுக்க வேண்டுமென்று நாம் கேட்டு உடனடியாக அந்த அரிசி தமிழகத்திற்கு வழங்கப்பட்டதாக கேள்வி நேரத்தின்போது நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய கோரிக்கை ஏற்கப்பட்டு எவ்வளவு அரிசி தமிழகத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்ற தகவலையும் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலிருந்து நேற்றைக்கு முன்தினம் நான் திரும்பிய செய்தி உங்களுக்கெல்லாம் தெரியும். நேற்றைக்கு முன்தினம் நான் டெல்லியிலே காங்கிரஸ் கட்சியினுடைய தலைவி திருமதி சோனியா காந்தி அவர்களை சந்தித்தபோது, தமிழ்நாட்டின் அரிசித் தேவையை எடுத்துச் சொன்னேன். அவர்கள் அதைப் பற்றிக் கவனிப்பதாகக் காலையிலே சொன்னார்கள். நான் நேற்றைய முன்தினம் மாலையில் இங்கு வந்து சேர்ந்தேன். நான் வருவதற்கு முன்பாகவே, அரிசி அனுப்பப்பட்டது என்ற செய்தி இங்கே வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அரிசி எவ்வளவு வந்தது என்று திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கேட்டார்கள். மொத்தமாக வந்தது 2 இலட்சத்து 50 ஆயிரம் டன் அரிசி; 65 ஆயிரம் டன் கோதுமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)